BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

## ஆரம்ப கட்ட நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்காக நகரின் புதுமை படைக்கும் மாவட்டம் ஃபௌண்டர் இன்ஸ்ட்டிட்யூட் (FI) ஐ வரவேற்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 22, 2020) – ப்ராம்ப்ட்டன் நகர சபையானது, தனது கடந்த கூட்டத்தில், அதிக உட்பொதிவு கொண்ட, ஆரம்ப கட்ட நிறுவனங்களுக்கு ஆதரவை வழங்கிவருகிற, உலகளாவிய உந்துதல் கொடுக்கின்றம் நிறுவனமான, ஃபௌண்டர் இன்ஸ்ட்டிட்யூட் (FI) உடன் கூட்டு வைக்க ஏகமனதாக ஒப்புதல் அளித்தது. இந்த கூட்டாண்மையில் ஃபௌண்டர் இன்ஸ்ட்டிட்யூட் (FI) நிறுவனத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு, ஆண்டொன்றுக்கு $ 30,000 வரை நிதியுதவி அளிப்பது அடங்குகிறது.

FI-ஐ சேர்ப்பது என்பது, ப்ராம்ப்ட்டனின் டவுண்டவுன் பகுதியில் புதுமை படைக்கும் மாவட்டத்தை உருவாக்குவதற்கான மற்றொரு படியாகும்; இது தொழில்முனைவோருக்கும் வணிகங்களுக்கும், அவர்களுடைய பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆதரவை வழங்கும்; நகரத்தின் புதுமை படைக்கும் மாவட்டத்தை விரிவாக்குவதே, நகரத்தின் பொருளாதார மீட்சிக்கான யுக்தி மீட்பு வியூகத்தின் முக்கிய குறிக்கோளாக இருக்கிறது.

சிறப்பு வாய்ந்த திட்டச்செயல்முறைகள், பயிற்சி வகுப்புகள், நிதி கிடைப்பதற்கான வழி மற்றும் உலகத் தரம் வாய்ந்த வழிகாட்டல் நெட்வொர்க் ஆகியவற்றின் மூலம் இந்த நிறுவனங்களுக்கு FI ஆதரவு வழங்குகிறது. $950 மில்லியனுக்கும் அதிகமான மூலதனத்தொகையை திரட்டிய, மற்றும் உலகளவில் சுமார் 25,000 வேலைகளை உருவாக்க உதவிய, 4,300 க்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு, FI தகுதிச்சான்று வழங்கியுள்ளது.

கூட்டாண்மையின் பிற நன்மைகள் பின்வருமாறு:

- திட்டச்செயல்முறை விரிவாக்கம்; வாட்டர்லூ, டோரான்ட்டோ மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து தொழில்நுட்ப தொழில்முனைவோரை ப்ராம்ப்ட்டன் நகருக்குள் கொண்டுவருதல்
- திட்டச்செயல்முறையில் பங்கேற்கின்ற ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோருக்கான கல்வி உதவித்தொகை
- சர்வதேச ஆரம்பக் கட்ட தொழில்முனைவோர் மற்றும் முதலீட்டாளர்கள் அடங்கிய இந்த தலைமுறைக்கு வழிகாட்டுதல்
- சர்வதேச அளவில் இருக்கின்ற FI கிளை அலுவலகங்கள் மூலம் நகரத்தின் அயல்நாட்டு நேரடி முதலீட்டு முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்

- உலகளாவிய FI நெட்வொர்க் மூலம் ப்ராம்ப்ட்டன் நகருக்கு ஒரு வடிவம் கொடுக்க உதவுதல்
- தொடக்க நிறுவன்ங்களுக்கெனவே அர்ப்பணிப்பு கொண்ட ஒரு பிரத்யேக சைபர் பாதுகாப்பு அமைப்பு மற்றும் திட்டச்செயல்முறையை உருவாக்குதல்
- முதலீட்டாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் செயல்படுத்தும் அதிகாரிகளைக் கொண்ட ஒரு வழிகாட்டல் வலையமைப்பை உருவாக்குதல்

ப்ராம்ப்ட்டனின் புதுமை படைக்கும் மாவட்டத்தின் பிற பங்காளிகளில் ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோர் மையமும் அடங்கும்; கேட்டலிஸ்ட் சைபர் ஆக்ஸிலரேட்டர் (ரோஜர்ஸ் சைபர் செக்யூர் கேட்டலிஸ்ட் மற்றும் ரையர்சன் DMZ வழிநடத்துவதன் பேரில்); ஆராய்ச்சி புதுமைபடைத்தலை வணிகமயமாக்கலுக்கான (Research Innovation Commercialization(RIC)) மையம்; ரையர்சன் வென்ச்சர் ஸோன்; பிராம்ப்டன் வர்த்தக கழகம் மற்றும் டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் வணிக மேம்பாட்டு பகுதி (BIA).

**அறிஞர் கூற்றுக்கள்**

“இந்த தொற்று பரவலில் இருந்து நாம் வெளிப்பட்டு, நமது உள்ளூர் பொருளாதாரத்தை மறுதொடக்கம் செய்யும்வேளையில், தொழில்முனைவோர் மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்கள் நமது நகரத்தைக் கண்டுகொண்டு, வளர்ந்து வரும் நமது புதுமை படைக்கும் கண்டுபிடிப்பு மாவட்டத்தில் இணைவதை நாங்கள் வரவேற்கிறோம். ஃபௌண்டர் இன்ஸ்ட்டிட்யூட் அமைப்பானது, சர்வதேச அளவிலான ஆரம்பகட்ட நிறுவனங்களை ப்ராம்ப்ட்டன் நகருக்குள் ஈர்க்க உதவும்; இது நமது பொருளாதாரத்திற்கு பங்களிப்பதுடன் புதிய வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கும். நிறுவனங்களுடைய வளர்ச்சிப் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களுக்கு ஆதரவை வழங்கும் பணியில் நாங்கள் இருப்பதால், ஃபௌண்டர் இன்ஸ்ட்டிட்யூட் -ஐ வரவேற்பதில் நாங்கள் பரவசமடைகிறோம். ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நமது பொருளாதார மீட்சிக்கான யுக்தியில் நமது புதுமை படைக்கும் மாவட்டத்தின் தொடர்ச்சியான மேம்படுத்தலானது ஒரு முக்கிய செயலாகும்; மேலும் அதன் வெற்றியில் ஃபௌண்டர் இன்ஸ்ட்டிட்யூட் ஒருங்கிணைந்த பங்காற்றலைச் செய்யும். தொற்று பரவலில் இருந்து நமது நகரத்தை விடுபடச்செய்து, முன்னோக்கி நகர்த்திச் செலுத்தும்போது, நமது தொழில்முனைவோர் மற்றும் வணிக சமூகத்தினர் முழுமையான மீட்சி பெற்று எதிர்கால வளர்ச்சிபெறுவதற்காக, பெரும் ஆதரவுகள் வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ”

*- பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத்தலைமை பொறுப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் கலாச்சாரத்துறை  துணைத்தலைமை பொறுப்பு, மேயரின் கோவிட் -19 பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ கனடாவின் புதுமை படைக்கும் தொழில்வளாகத்தின் நடுவில் நமது பிரதான இருப்பிடத்தைக் கொண்டபடி, புதுமைபடைத்தலில் உலகளாவிய முன்னணியாளராக வேண்டும் என்ற குறிக்கோளுடன்

ப்ராம்ப்ட்டன் நகரம் அதன் சுற்றுச்சூழல் அமைப்பை வளர்த்து வருகிறது. ஃபௌண்டர் இன்ஸ்ட்டிட்யூட் உடன் இணைந்து இது போன்ற கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கும், ப்ராம்ப்ட்டன் நகரை தொழில்முனைவோர் மற்றும் வணிகங்களுக்கான உகந்த இடமாக மாற்றுவதற்கு தேவையான நிலைமைகளை உண்டாக்குவதற்கும் எங்கள் ஊழியர்கள் கடமைப்பட்டுள்ளனர். "

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

" எதிர்காலத்தில் ப்ராம்ப்ட்டன் நகரமானது, ஏராளமான தொழில்நுட்ப ஆரம்பக் கட்ட தொழில்களுக்கான அமைவிடமாக மாறவிருப்பதை என்னால் இப்போதே காண முடிகிறது. தொழில்நுட்ப ஆரம்பக் கட்ட தொழில்கள் பெரும்பாலும் புலம்பெயர்ந்தோரால் துவங்கப்படுகின்றன. ப்ராம்ப்ட்டன் நகரம் அதிக எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்தோரின் தாயகமாக இருப்பதுடன், டோரோன்ட்டோ மற்றும் வாட்டர்லூ ஆகிய உலகளவில் புகழ்பெற்ற தொழில்நுட்ப சங்கமங்களுக்கு மத்தியில் வாழுகின்ற, நாட்டிலேயே இளைய மக்கள் தொகை அதிகம் கொண்ட ஒரு பகுதியுமாகும். அருகாமையில் உள்ள நகரங்களைக் காட்டிலும், கட்டுப்படியாகும் செலவில் சாதகமான நன்மைகளைக் கொண்டபடி, மேற்கத்திய தொழில்நுட்ப மையங்களைக் காட்டிலும் அதிக மக்கள் தொகையும் கொண்டிருக்கின்ற ப்ராம்ப்ட்டன் நகரம் ஆரம்பக் கட்ட தொழில்களுக்கான ஒரு மையமாக விரைவாக வளரக்கூடிய சாத்தியம் கொண்டுள்ளது."

*- சுனில் ஷர்மா, நிர்வாக இயக்குனர், டெக்ஸ்டார்ஸ் டோரோன்ட்டோ; இணை இயக்குனர், ஃபௌண்டர் இன்ஸ்டிட்யூட், டோரோன்ட்டோ மற்றும் வாட்டர்லூ கிளை அலுவலகங்கள்*

" ஃபௌண்டர் இன்ஸ்டிட்யூட் அமைப்பானது, ப்ராம்ப்ட்டன் நகரின் வளர்ந்து வரும் தொழில்நுட்ப ஆரம்பக் கட்ட தொழில்களுக்கு தேவையான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்க உதவுவதற்காக, அதன் கூட்டாளராக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறது. டோரோன்ட்டோ தொழில்நுட்ப வளாகமானது, ஒரு நிறுவனத்தைத் தொடங்குவதற்கு உகந்த, உலகின் மிகச் சிறந்த பிராந்தியங்களில் ஒன்றாகும்; அதற்காக ப்ராம்ப்ட்டன் நகரை முன்னணியில் கொண்டு வருவதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டுள்ளோம். "

*- ரையன் மிஷெலெட்டி, உலகளாவிய இயக்கசெயல்களுக்கான தலைவர், ஃபௌண்டர் இன்ஸ்டிட்யூட்*

" ப்ராம்ப்ட்டன் நகரவாசியாகவும் ஃபௌண்டர் இன்ஸ்டிட்யூட் இல் சமீபத்தில் பட்டம் பெற்றவனுமாகிய நான், என்னென்ன வாய்ப்புக்களை FI கொண்டு வருகின்றது என முதற்கண் பார்த்திருக்கிறேன். FI மற்றும் ப்ராம்ப்ட்டன் ஆகியவற்றின் கூட்டாண்மையினால், தொழில் முனைவோர் தங்கள் நெட்வொர்க்குகளை விரிவுபடுத்துவதற்காக, வாராந்திர மெருகேற்றல் மற்றும் குழு அமர்வுகளை நடத்தவும் இயலும்; தங்களுக்கென சொந்தமான ஆரம்பகட்ட தொழில் அமைப்பைக் கொண்ட வழிகாட்டிகளுக்கு புதியவர்களை அணுகும் வாய்ப்பினை வழங்கி ப்ராம்ப்ட்டன் வாசிகளுக்கு வலுசேர்க்க முடியும்; அதன் மூலம், அவர்களின் ஆரம்ப நிலை அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். கனடாவின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றாக இருக்கின்ற

ப்ராம்ப்ட்டன் நகரமானது, புதுமை படைப்போர் மற்றும் தொழில் முனைவோரின் வெற்றிக்கான உண்மையான மையமாக நிலைநிறுத்தப்படும்."

*- டேனியல் யெபோவா, பொது மேலாளர், எல்லெர்க்கா ஹெல்த் கார்ப்.*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, *மற்றும்* Instagram *ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள்.* www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca